
# மஹத்




ப்ரக்ஞன்

## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | மஹத் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | விழிப்புணர்வு |
| **முதற்பதிப்பு** | : | 2019 |
| **பக்கங்கள்** | : | 15 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# மஹாத்

(இறைவன் மஹாத்தானவன்)

ப்ரக்ஞன்

# மஹாத்

## (இறைவன் மஹாத்தானவன்)

ஆன்மாவைப் '**புருஷன்**' என்றும், எல்லாவற்றையும் நடத்தி வைக்கின்ற, சக்தியாகிய மாயையை '**பிரக்ருதி**' என்றும் கூறப்படுகின்றது.

புருஷன் என்பது ஒரு அறுதி உணர்வு நிலை ஆகும். அதை மதங்கள் **இறைவன், சிவம், அல்லா, ஜெகோவா** என பலவாறாக அழைக்கின்றது. அந்த புருஷனிடமிருந்து **பிரக்ருதி** என்கிற இயற்கை வெளிப்பட்டது.

இந்தப் **பிரக்ருதி** இரண்டு பாகமாக உள்ளது. அதாவது, **புருஷ பாகம்** மற்றும் **ஸ்திரீ பாகம்** என்று இரண்டாக இருப்பதினால், இதை சைவ சித்தாந்தம் **சிவம் - சக்தி** என்று கூறுகின்றது.

ஆக, ஹிந்து மதத்தில் தோன்றிய பல்வேறு சமயங்களாகிய **சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம்** மற்றும் **சௌரம்** போன்றவைகளில் சைவ

சித்தாந்தம் கூறும் **புருஷன்** என்பது, சிவ பெருமானாகவும், அவரிடமிருந்து வெளிப்பட்ட பிரகிருதியின் ஆண்பாகம் அவரேயாகவும், அதன் பெண்பாகம் சக்தியாகவும் கூறப்படுகின்றது.

சைவ சித்தாந்தத்தில் இவ்வாறென்றால், வைணவ சித்தாந்தங்களில் **புருஷன்** என்பவர் நாராயணன் எனப்படுவதினால், அவரால் படைக்கப்பட்ட பிரக்ருதியின் ஆண்பாகமும், பெண்பாகமும் அவரே ஆவார்.

அப்படியானால், வைணவத்தில் சிவன்? அவருக்கு அங்கு இடமில்லை. அத்துடன் அதற்கான விடையும் இல்லை.

இருப்பினும், அதிலே உள்ள ஒரு சிலர் சிவனையும், நாராயணனையும் ஒன்றாக இணைத்து **'சங்கரநாரயணன்'** என்கின்றனர்.

அடுத்து, அம்பாள் வழிபாடாகிய சாக்தமோ வேறொரு வழி முறையில் புருஷன் என்பது **'சக்தி'** மட்டுமே என்றும், பிரக்ருதியின் அனைத்து விரிவுகளும், அந்த ஆதி பராசக்தியிடமிருந்து வெளிப்பட்டது என்றும், அதிலே, மூன்று முக்கிய சக்திகளாக **பிரம்மா, விஷ்ணு, சிவன்** என்ற மும்மூர்த்திகளை, அந்த ஆதிபராசக்தி படைத்தாள் என்றும் கூறப்படுகின்றன.

இவ்வாறு, பலவாறாகப் போதிக்கப்படுகின்ற அவரவர்களின் கோட்பாடுகளும், கொள்கைகளும் கொண்ட சித்தாந்தங்கள், அவரவர்களுக்கு உயரிய சித்தாந்தங்களாக இருப்பினும், அது தத்துவத்தின் உண்மைத் தன்மையை மாற்றி விடுகின்றது.

அதேசமயம், இன்றைய நவீன விஞ்ஞானம் இதுபோன்ற சித்தாந்தங்களுக்கு அப்பாற்பட்டு, அதன் பாணியில், இதை "**மேட்டர்**" மற்றும் "**எனெர்ஜி**" (Matter and Energy) என்று கூறுகின்றது.


அதாவது, மேட்டர் என்ற பொருள் நம்முடைய சனாதன தர்மத்தில் கூறப்பட்ட **பரம்பொருள்** (சிவம்) என்பதாகவும், எனெர்ஜி என்பது, ஆற்றல் அல்லது **சக்தி** என்பதாகவும் உள்ளது.

**E = MC2**

E = Energy (ஆற்றல் அல்லது சக்தி)

M = Mass (or) Matter (பொருள் அல்லது சிவம்)

C2 = Speed of Light (அறிவொளியின் விரிவு அல்லது வேகம்)




ஆக, நவீன விஞ்ஞானம் கூறுவதுப் போன்று ஒரு **ஆற்றலை (சக்தியை) ஆக்கவோ, அழிக்கவோ, முடியாது, ஆனால், ஒரு ஆற்றலை வேறொரு ஆற்றலாக மாற்ற முடியும்** என்பதே.

இதன் அடிப்படையில் பார்த்தாலும், இந்த **புத்தி சக்தி** என்பது, ஒரு அறிவு தாவரத்தில் தொடங்கி, ஆறு அறிவு படைத்த மனிதன் வரை பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட மாறுதலுக்கு உட்பட்டே இருக்கின்றது.

எனவே, இந்த **சக்தி மாற்றம்** என்பது, ஒரு அறிவில் தொடங்கி, ஆறு அறிவு வரை விரிந்துக் கொண்டே உள்ளதினால், இந்த பிரபஞ்சமனதின் எல்லையற்ற ஆற்றலாகிய சர்வ வியாபியாகிய **மஹத்** விரிந்துக்கொண்டே போகின்றது.

ஆக, பிரக்ருதியானது இன்னமும் விரிந்த நிலையில் '**மஹத்**' என்னும் மனதின் மேம்பட்ட, உயர் அறிவு நிலையாகிய புத்தி சக்தி விரிவடைந்துக் கொண்டே உள்ளது. அத்தகைய, அந்த அறிவின் பரந்த, விரிவு நிலையே, அதில் படைக்கப்பட்ட உயிரினங்களில், தாவரங்களில் ஒரு அறிவு தொடங்கி, ஆறு அறிவு உள்ள மனிதன் வரை, மேம்பட்ட மனமாக பிரகாசிக்கின்றது.

அந்த அறிவு பிரகாசிக்கின்ற உபாதியாகிய உடல்கள் என்பதில், அந்தந்த உயிரினங்களிடையே உள்ள புலன்களின் அடிப்படையிலும், அவைகளின் மனதின் சக்தியை பொருத்தும் மாறுபடுகின்றது.

ஆக, அந்த சக்தியை ஆக்கவோ, அழிக்கவோ, முடியாது, ஆனால், அந்த சக்தியை மாற்றத்திற்கு உட்படுத்த முடியும் என்பதற்கு ஏற்ப, பல்வேறு உபாதிகளாகிய உடல்கள் மூலம் அறிவு விரிந்துக்கொண்டே போகின்றது.

அதேசமயம், அதன் அறியும் திறனில் ஏற்படும் வித்தியாசம் என்பது, படைக்கப்பட்ட உடல்களில் உள்ள

புலன்களைப் பொருத்துத்தான் உள்ளதே தவிர, அந்த அறிவில் எந்த மாற்றமும் இல்லை.

அதாவது, ஒரு கணித சூத்திரத்தில், எந்த, எந்த எண்களை மாற்றி, மாற்றி கொடுக்கிறோமோ? அந்தந்த எண்ணிற்கு ஏற்றவாறு விடைகள் சரியாக கிடைக்கும்.

அதாவது, சூத்திரத்தில் கொடுக்கப்படுகின்ற எண்களுக்கு ஏற்றவாறு, அதன் விடைகள் மாறி, மாறி வந்தாலும், அது சரியாக இருக்க, அந்த சூத்திரம் மட்டும் மாறாமல் இருக்க வேண்டும்.

அதுப்போன்று, படைக்கப்பட்ட உடல்களின் வித்தியாசங்களைப் பொருத்து, அதில் பிரகாசிக்கும் புத்திசக்தி, மாறி, மாறி இருந்தாலும், அதற்கு ஆதாரமான அந்த **அறிவு மட்டும்** மாறாமல் அப்படியே இருக்கின்றது.

இப்படித்தான் இந்த பிரபஞ்சம் எதைப் படைத்து, எதைக்காத்து, எதை அழித்தாலும், அத்தனைக்கும் ஆதாரமான அந்த அறிவு மட்டும் மாறாமல் இருப்பதினால்தான், இந்த பிரபஞ்சம் நியதி மாறாமல் உள்ளது. இதைத்தான் “**ரிதம்**” என்று அழைக்கிறோம்.

ஆக, இந்த பிரக்ருதி உள்படப் பிரபஞ்சம் என்பது 24 தத்துவங்களில் அடங்கியிருக்கிறது.

## மஹத்

இதிலே, பிரகிருதி என்பது முதல் தத்துவம். அதற்கு '**ப்ரதானம்**' என்றும் ஒரு பெயர் உள்ளது. அதிலிருந்து மஹத் என்ற இரண்டாவது தத்துவம் வருகிறது.

இது மனிதனிடம் காணப்படும் புத்தி சக்தி போன்றது. அதுபோல, இந்த பிரிகிருதியின் புத்தி சக்திதான் மஹத் எனப்படுகின்றது. இதை தமிழில் "**பேருணர்வு**" என்றும் கூறலாம்.

பிரக்ருதியோடு புருஷனை தொடர்பு படுத்துவது இந்த **மஹத்** என்ற **பேருணர்வே** ஆகும். அதாவது, மாயையுடன் ப்ரஹ்மத்தை தொடர்பு படுத்துவது இந்த **மஹத்** என்ற அறிவுதான்.

இந்த அறிவிலிருந்தே, இந்திரியங்கள். மனம் உள்ளிட்ட மற்ற அனைத்தும் பிறக்கின்றன. அவைகள் மூலம் அனைத்தும் அறியப்படுகின்றன.

இந்த **மஹத்** என்னும் மகத்தான மனதின் உயர் அறிவு நிலை என்பது, உயிரினங்களுக்கு முக்குண அடிப்படையில், மூன்று விஷயங்களை உருவாக்குகிறது.

அது, "**தன்னுணர்வு நிலை**" (EGO), '**பிரித்து உணரும் நிலை**' (DISCRIMINATION) மேலும், இந்த இரண்டு நிலைகளையும் கொண்ட மனம் (MIND) என்னும் '**சிந்தனா சக்தி**' நிலை ஆகும்.

## மஹத்

மஹத் தத்துவத்தின் ஒரு விரிவில் சாத்விக அம்சமாக, ஐந்து ஞானேந்திரியங்களும், ஐந்து கர்மேந்திரியங்களும் வருகின்றன.

ஞானேந்திரியங்கள் என்பன அறியும் சக்திகளான **காணுதல், கேட்டல், நுகர்தல், சுவையுணர்தல்** மற்றும் **தொடுவுணர்ச்சி** என்பன. இவையனைத்தும் நுண்ணிய உணர்வுகளைக் கொண்டவைகள்.

அடுத்து, கர்மேந்திரியங்கள் என்பன ஐந்து உறுப்புக்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கொண்டதாக உள்ளது. அவைகள், **பேசுதல்** (வாய்), **பற்றுதல்** (கை), **நகர்தல்** (கால்), **வம்ச விருத்தி செய்தல்** (பிறப்புறுப்பு), **கழிவுகளை அகற்றுதல்** (குதம்) போன்றவைகளாகும்.

மஹத் தத்துவத்தின் இன்னொரு விரிவில் தாமஸ அம்சமாக தன்மாத்திரைகள் எனப்படும் ஐந்து பௌதிக உறுப்புக்கள் வருகின்றன. அவைகள் முறையே, **கண், காது, மூக்கு, வாய்** மற்றும் **தோல்** போன்ற இந்த ஐந்து உறுப்புக்களும் **காணுதல், கேட்டல், நுகர்தல், சுவையுணர்தல்** மற்றும் **தொடுவுணர்ச்சி** போன்ற ஞானேந்திரியங்களின் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றன.

மேலும், இவைகள், இந்த பிரபஞ்சத் தொடர்பான **நிலம், நீர், நெருப்பு, காற்று** மற்றும் **வெளி** ஆகிய பஞ்சபூதங்களுக்கும் பொறுப்பாக உள்ளது.

[இதன் காரணமாகவே **சிவம் (வெளி)** பஞ்ச பூதங்களின் மூலம் பிரபஞ்ச இயக்கத்தை மேற்கொள்கிறது என்பது தெளிவு].

ஆக, இந்த சாத்விக மற்றும் தாமஸ இயக்கங்களின் ஒவ்வொரு மாறுபாட்டுக்கும் பொறுப்பானதாக ராஜஸ இயக்கம் உள்ளது. இதன் பொருள், உயிரினங்கள் தாமஸ மற்றும் சத்வ குணங்களுக்கிடையில் மாறுவது என்பது, ரஜோ குணத்தின் அடிப்படையால்தான் ஆகும்.

இவையெல்லாம் சேர்ந்த இயக்கமே பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு உயிரின் இயக்கமாக, தனித்தனியாக உள்ளது. அதே நேரத்தில், அவைகளின் ஒட்டுமொத்த பிரபஞ்சத்துக்கும் பொறுப்பானதாகவும் உள்ளது.

அதாவது, புருஷனிலிருந்து முதல் தத்துவமாக பிரக்ருதியும், இரண்டாவது தத்துவமாக '**மஹத்**' என்ற பிரபஞ்ச மனமாகிய புத்தியும், மூன்றாவது தத்துவமாக '**அஹங்காரம்**' என்ற தன்னுணர்வு நிலையும் உண்டாகிறது.

அதாவது, '**நான்**' என்று தனியாக ஒன்று இருக்கிறது என்ற உணர்ச்சிதான் '**அஹங்காரம்**' (ego) ஆகும்.

இந்த அஹங்காரம் இரண்டாகப் பிரிகிறது.

ஒரு பக்கம் சைதன்யமுள்ள [உயிரும் அறிவுமுள்ள] சீவனாகி அவனுடைய மனதாகவும், ஐந்து ஞானேந்திரியங்கள்,

ஐந்து கர்மேந்திரியங்கள் எனவும் ஆகிறது. இன்னொரு பக்கம் ஜடப் பிரபஞ்சத்திலே ஐந்து தன்மாத்திரைகளாகவும், ஐந்து மஹா பூதங்களாகவும் ஆகிறது.

இப்படியாக, பிரகிருதி, மஹத், புத்தி, அஹங்காரம், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், பஞ்ச மஹாபூதங்கள் என்று மொத்தம் 24 தத்துவங்கள் இருக்கின்றன.

ஆக, இந்த 24 தத்வங்களாகப் பரிணமிப்பது, சைதன்ய புருஷனின் ஸாந்நித்தியம் என்பதினால்தான், ஆன்மாவாகிய புருஷன் பிரக்ருதி சம்பந்தமேயில்லாத **கேவல ஞானஸ்வரூபி** என்றும் கூறப்படுகின்றது.

**‘கேவலம்’** என்றால் பிறவற்றின் கலப்பு இல்லாமல், தனித்து, தன்னந்தனியாக இருப்பது என்று பொருள். இதனைக் ‘கைவல்யம்’ என்றும் அழைக்கலாம்.

அதாவது, **‘கைவல்யம்’** என்றாலே, **மோக்ஷம்** என்றுதான் பொருள்.

சீவனானவன் (மனமானது) இருபத்து நான்கு தத்துவங்களையும் தள்ளிவிட்டு, ஜடத்திலிருந்து விடுபட்டு, சைதன்யமான புருஷனின் தனித்த நிலையில் இருப்பதே **‘கைவல்யம்’** எனப்படுகின்றது.


(ஆனால், தமிழில் எப்படியோ "**கேவலம்**" என்றால், மட்டமானது, தாழ்வானது என்ற பொருள் வந்து விட்டது)

இப்படிப்புருஷன் என்கிற ஆன்மாவிலேயே நிலைத்து நின்று, மற்ற எல்லாவற்றையும் மாயை என்று தள்ளி விடுவதுதான் அத்வைதத்தின் ஆழமான இலக்ஷியமும் ஆகும்.

அதாவது, காரியமற்ற நிர்குணப் பிரம்மமே காரியமுள்ள ஸகுண ஈஸ்வரனாக அல்லது பிரக்ருதியாக இருந்துக்கொண்டு, தனது மாயா சக்தியால், இந்த பிரபஞ்சத்தை வழி நடத்துவது என்பது அதனிடமிருந்து வெளிப்பட்ட **மஹத்** என்ற சர்வ வியாபகமான பிரபஞ்ச மனதின் அறிவொளி என்பதினால், அந்த **அறிவை அறியும் மனமே,** அறிவுப் பரிணாமத்தில் உயர் நிலைக்கு வருகின்றது.

அத்தகைய உயர் நிலைக்கு வந்த அறிவு கொண்டுதான் அஹங்காரத்தை அறிந்து, மூலப் பிரக்ருதிக்குத் திரும்பி, அந்த புருஷன் என்ற ஆன்மாவாக என்றுமே தன் சொரூபத்தில் நிலையாக நிலைத்து நிற்க முடியும் என்பதை எடுத்துக் கூறும் எளிய மார்க்கமே "**ஆன்மவியல்**" என்ற ஆன்ம ஞானம் அளிக்கும் பாடங்கள் ஆகும்.

**ஓம் சாந்தி!**


மஹத்
E = MC2
ப்ரக்ஞன்